**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

O.S. NO. 52/2020

**வா.சா.1**

**திரு. ராஜன் (எ) கரிவரதராஜன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

நான் 12 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு புளியம்பட்டியில் சொந்தமாக பூமி உள்ளது. என் மகன் பி.பி.ஏ படித்துள்ளான். என் மகள்கம்பெனி செகரட்டரி படித்துள்ளார். என் மனைவி டிப்ளமோ படித்துள்ளார். தாவா 2, 3 அயிட்ட சொத்தை பொறுத்து நான் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். பரிகாரம் கேட்காத நிலையில் எதற்காக சொத்துக்களை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் மேற்படி சொத்துக்களில் பிரச்சனை எதுவுமில்லை என்பதால் பரிகாரம் கேட்கவில்லை. வழக்கில் குழப்பத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் 2, 3 அயிட்ட சொத்துக்களை வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தை நான்தான் தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள விபரங்கள் தெரியும். பிரமாண வாக்குமூலம் 7 வது பத்தியில் குறிப்பிட்டுள்ள வாசகங்கள் சரியா என்றால் ஆமாம். நான் தற்போது என் மனைவியின் முகவர் என்ற அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்

என்றால் ஆமாம். நான் என் மனைவியின் முகவர் என்று காண்பிக்க எழுத்துமூலமான ஆவணம் எதுவுமில்லை என்றால் சரிதான். நான் கூறும் முகவர் என்ற முறையில் சொத்தினை எழுதி தரமுடியுமா என்றால் முடியாது. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும், பாத்தியமும் இல்லை என்றால் சரிதான். நான் முகவர் என்று எழுத்துமூலமான ஆவணங்கள் எதுவும் இல்லாத நிலையில் சாட்சியம் அளிக்க எனக்கு அருகதையில்லை என்றால் சரியல்ல. சுபிக்ஷா அவென்யூ சொத்தை பொறுத்து பிரச்சனை எதுவுமில்லை என்றால் சரிதான். மேற்படி சுபிக்ஷா அவென்யூ-க்கு என் மனைவி 2.90 ஏக்கர் நிலமும், 1 முதல் 3 பிரதிவாதிகள் 2.07 ஏக்கர் நிலமும் கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நிலங்களைப் பொறுத்து லேஅவுட் அனுமதிபெறப்பட்டு சொத்துக்கள் லேஅவுட்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை பொறுத்தான நடவடிக்கைகள் அனைத்தும் 2011 ஆண்டில் தான் நடந்தது என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்தை பொறுத்து எங்களுக்குள் ஒப்பந்தம் எப்போது ஏற்பட்டது என்றால் 2011ம் ஆண்டிலிருந்தே உள்ளது. 2011ம் ஆண்டிலிருந்து 9 ஆண்டுகள் கழித்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுபிக்ஷா அவென்யூவை பொறுத்து சத்தியசீலன் என்பவருடன் 2011ம் ஆண்டு நான் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தில் என் மனைவியும், பிரதிவாதிகளும் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். மேற்படி சத்தியசீலன் ஒப்பந்தத்தில் பிரச்சனை ஏற்பட்டதால் 2012ம் ஆண்டு போலீசில் புகார் கொடுக்கப்பட்டு அதன்பேரில் போலீசார் எங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி புகார் சமயத்திலேயே எங்களுக்கும், பிரதிவாதிகளுக்கும்

மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் இல்லை. மேற்படி ஒப்பந்தத்தில் பிரதிவாதிகளும் கையெழுத்து போட்டார்களா என்றால் எனக்கு நினைவில்லை. எனக்கு முகவராக நியமனம் செய்து ஆவணம் இல்லாத நிலையில் நானே தன்னிச்சையாக சுபிக்ஷா அவென்யூவை பொறுத்து சத்தியசீலனுடன் சேர்ந்து ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**